www.samugasinthanai.in

# காமராஜர் பணி – கல்வி மற்றும் நீர் மேலாண்மை திட்டங்கள்





https://en.wikipedia.org/wiki/K._Kamaraj#/media/File:K_Kamaraj_1976_stamp_of_India.jpg
**In office:** 13 April 1954 – 2 October 1963

https://commons.wikimedia.org/wiki/File:Kamarajar.jpg

Kamaraj Statue in Marina Beach, Chennai depicting his contribution to education in the state
https://en.wikipedia.org/wiki/K._Kamaraj#/media/File:Statue_of_Kamarajar.jpg

இறைவன் தமிழகத்திற்கு ஒரு பரிசு அளிக்க நினைத்தான்- அவன் சொர்கத்தின் கதவுகளை திறந்து மாமனிதர் திரு K.காமராஜர் அவர்களை அனுப்பிவைத்தான்/ தமிழகத்தில் பிறக்கவைத்தான் என்று இன்றும் என்றும் நினைக்க தோன்றுகிறது.

I. கல்விப்பணி

i. நீதிக்கட்சிக்குப்பிறகு தமிழகத்தில் 11 ம் வகுப்பு வரை கட்டாய இலவச கல்வியும் மேலும் பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தையும் அறிமுகப்படுத்தினார். இது பின்னாளில் மாண்புமிகு முதல்வர் MGR அவர்களால் பெரிதும் விரிவு படுத்தப்பட்டது .

ii. ஆரம்பள்ளியில்லா ஊரேயில்லா நிலையை உருவாக்கினார். பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை பெருக்கினார். மாணவ மாணவியருக்கு இலவச சீருடை வழங்கினார்.

iii. கல்விக்கான திட்டத்திற்... மிக அதிக நிதி ஒதுக்கினார்கள்.

II. அணைகள் கட்டுதல் / நீர்ப்பாசன கால்வாய்கள்அமைத்தல்

2.நீர் மேலாண்மை திட்டங்கள்

பல்லவ, சோழ, பாண்டிய மாமன்னர்களுக்குப் பிறகு தமிழகத்தில் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீருக்காக பல அணைகளை கட்டியவர் முன்னாள் முதல்வர் மாண்புமிகு திரு K.காமராஜர் அவர்கள்.

ஆரம்ப காலத்தில் விவசாயத்துக்காக தண்ணீரை தேக்கி வைக்கவே அணைகள் கட்டப்பட்டன அதன்பின்பு, அணைகள் மூலம் பொதுமக்களின் குடிநீர் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டன .

ஆரணி, புள்ளம்பாடி, பரம்பிக்குளம், நெய்யாறு, அமராவதி, ஆழியாறு, மணிமுத்தாறு, வைகை, மேல் பவானி, கீழ்பவானி, கிருஷ்ணகிரி, சாத்தனூர், வீடுர் போன்ற அணைகள் 1954-ம் ஆண்டு முதல் 1963-ம் ஆண்டு வரை காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது கட்டப்பட்டு அவரால் திறக்கப்பட்டவை ஆகும்.

1955-ம் ஆண்டு கேரள மாநில பாலக்காடு சென்னை மாகாணத்துடன் இருந்தது. அப்போது முதல் அமைச்சராக இருந்த காமராஜர், பாலக்காட்டை அடுத்த மலம்புழாவில் புதிய அணையை கட்டினார். அது 1956ல் கேரளாவுடன் இணைந்தது. தற்போது இந்த

அணையால் பாலக்காடு மற்றும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த கேரள மாநில மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

1958ல் செய்யாறு ஆணை, கண்ணயாகுமரி கால்வாய், மேலும் பலகால்வாய்கள் அமைத்து நீர்ப்பாசனத்தை பெருக்கினார்கள்.

காமராஜர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட அணைகள் அனைத்தும் 60 ஆண்டுகளை கடந்தும் மிகப்பிரமாண்டமாக காட்சி அளித்து வருகின்றன. இந்த அணைகள் இன்றுவரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாயத்துக்கும், குடிநீருக்கும் பயன்பட்டு வருகின்றன. எனவே காலம்-1954-1963 தமிழகத்தின் பொற்காலமாகும். தமிழகமக்கள்/தமிழக அரசு அவருக்கு பெருமைசேர்க்கும் ஆகையில் அவரது பிறந்தநாளை தமிழகத்தின் நீர்பாசனநாள் (Irrigation day) என்று கொண்டாடலாம்.

……………………..

www.samugasinthanai.in